**செய்தி வெளியீடு எண்: 281** **நாள்: 23.04.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் இன்று (24.4.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 13 பல்கலைக்கழகங்களின் மதிப்பீடு மற்றும் தரவரிசைத் தொடர்பான மாநில பல்கலைக்கழகங்கள் தரவரிசைக் கட்டமைப்பு பணியினை கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்காக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கும் Indian Centre for Academic Rankings & Excellence (ICARE) Pvt. Ltd., என்ற நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ், 13 பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், 9 பல்கலைக்கழகங்கள் தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பிற்கு (National Institutional Ranking Framework-NIRF) தகுதி பெற்று விண்ணப்பித்தன. 2018–ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பில் அண்ணா, பாரதியார், சென்னை, அழகப்பா, மதுரை காமராசர், பாரதிதாசன் மற்றும் பெரியார் ஆகிய 7 பல்கலைக்கழகங்கள் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 100 முதல் 150 வரையிலான தரவரிசையிலும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 151 முதல் 200 வரையிலான தரவரிசையிலும் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம், பல்கலைக்கழக மானியக்குழு, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின் பல்வேறு துறைகள் மற்றும் பிற கல்வி தொடர்பான நிதி முகமைகளிடமிருந்து நிதி மற்றும் சலுகைகள் பெறுவதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது.

Indian Centre for Academic Rankings & Excellence (ICARE) Pvt. Ltd., என்ற தனியார் நிறுவனம், உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 13 பல்கலைக்கழகங்களில் மதிப்பீடு மற்றும் தரவரிசை குறித்த மாநில பல்கலைக்கழகங்களின் தரவரிசை கட்டமைப்பினை, எவ்வித கட்டணமின்றி, உருவாக்குவதற்கு முன்வந்துள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் துறைகளின் நிறைகள் மற்றும் குறைகள் தெரியவரும்.

இச்செயல்பாட்டின்மூலம் பல்கலைக்கழகங்கள் அவைகளின் நிறைகளை மேம்படுத்தி குறைகளை களைந்து தேசிய நிறுவன தர வரிசை கட்டமைப்பில் (NIRF) தனது தரவரிசையினை மேம்படுத்திக் கொள்ள இயலும்.

இதன் அடிப்படையில், 13 பல்கலைக்கழகங்களின் மதிப்பீடு மற்றும் தரவரிசைத் தொடர்பான மாநில பல்கலைக்கழகங்கள் தரவரிசைக் கட்டமைப்பு பணியினை கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் இன்று தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் சார்பாக அதன் துணைத் தலைவர் (பொறுப்பு) திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., அவர்களும், Indian Centre for Academic Rankings & Excellence (ICARE) Pvt. Ltd., என்ற நிறுவனத்தின் சார்பாக அதன் துணைத் தலைவர் முனைவர் கார்த்திக் ஸ்ரீதர் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை கூடுதல் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருமதி ஆர். லில்லி, இ.ஆ.ப., Indian Centre for Academic Rankings & Excellence (ICARE) Pvt. Ltd., நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு.ஏ. சந்திரசேகரன் மற்றும் திரு.சையத் முஜாத் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.4.2018**